# அகமலர்கள்

மாத இதழ்

வைகாசி 2008

17 DEC 2008
மாநகரசபை யாழ்ப்பாணம்



**உளநலத்திறன் விருத்திக் கழகம்.**

**யா / நாவற்குழி மகா வித்தியாலயம்,**

**நாவற்குழி, கைதடி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



களப்பயணத்தின் போது தரம் 2, 3 மாணவர்கள் நல்லூர் கந்தசுவாமி ஆலய சுற்றாடலில் காணப்படுகின்றனர்.
(மேலதிக விபரம் உள்ளே)




பொருளாதார வசதி குறைந்த ஒரு தொகுதி மாணவர்களுக்கு பாதணிகளை வழங்கும் நிகழ்வு மே - 30 - 2008ல் நடைபெற்றபோது குரு முதல்வர் வணக்கத்துக்குரிய நேசகுமார் அடிகளுடன் Y.MCA பிரதிநிதிகள் அகவணக்கம் செலுத்துகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# அகமலர்கள்

மாத இதழ் - வைகாசி - 2008

**'அகங்கள் மலர்வதால் அவலங்கள் மறையும்'**

அகம் - 01 மலர் - 03

**இதழாசிரியர்கள்;**

1. செல்வன் தி. புஸ்பகாந்
2. செல்வி எஸ். பிரியதர்சினி

பொது சன நூலகம்
17 DEC 2008
மாநகரசபை யாழ்ப்பாணம்

**வெளியீடு;**

**உளநலத்திறன் விருத்திக் கழகம்.**
**யா / நாவற்குழி மகா வித்தியாலயம்,**
**நாவற்குழி, கைதடி.**

## நாங்கள் பேசுகின்றோம்.

வணக்கம்,

அகமலர்களின் மூன்றாவது இதழுடன் உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி யடைகின்றோம்.

சூழலில் பல சவால்களை எதிர் கொண்டபடி, வெற்றிகரமாக அவற்றுக்கு முகம் கொடுத்தபடி நாம் மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருக்கின்றோம்.

எமது மாணவர்களது படைப்புக்களை அவர் தம் எண்ணங்களை, உணர்வுகளை உங்கள் முன் படைத்திருக்கின்றோம். மூடிகளைக் களைந்து அவர்தம் முகங்களைக் காட்ட முயலும் எமது முயற்சிகள் உங்களது ஆசிகளோடும், ஆதரவோடும் நிறைவேறுவதால் கிடைக்கும் ஆறுதல் அமைதி தருகிறது.

இந்த ஆறுதல் உணர்வுதான் எமது அடுத்த கட்ட வளர்ச்சிக்கு ஆதாரமாக உள்ளது.

அகமலர்களில் வெளிவரும் இரண்டு போட்டிகளிலும் எமது பாடசாலை மாணவர்களோடு, பிற பாடசாலை மாணவர்களும் ஆர்வத்தோடு கலந்து கொள்வது, எமது வளர்ச்சிக்கு உரமிடுவதாக உள்ளது.

ஆம் அகமலர்கள் தன்னோடு இணையும் அனைவரையும் அணைத்துச் செல்லவே ஆசைப்படுகிறது. எம்மை வழிப்படுத்தி நிற்கும் காப்பாளர், பொறுப்பாசிரியர் ஆகியோரது வழி நடத்தலில் இந்த ஆசைகளைச் சுமந்தபடி எமது பயணம் சுகமாக இருக்கிறது.

மீண்டும் சந்திக்கும் வரை நன்றிகளோடு விடை பெறுகின்றோம்.

- இதழாசிரியர்கள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே மலர்ந்துள்ளவை...


| எது? | எவரால்? | எங்கே? |
|---|---|---|
| 1) எனது குடும்பம் | செ. கோபினா | 01 |
| 2) கோபத்தால் மரணமா? | எஸ்.மைதிலி | 02 |
| 3) பொன்மொழிகள் | இ.நஜீவா | 02 |
| 4) நானும் எனது பாடசாலைக்கண்காட்சியும் | எஸ்.சஞ்சீவன் | 03 |
| 5) சுனாமி | இ. நகிலன் | 04 |
| 6) எனது பாடசாலைக் கண்காட்சி. இசை அறை | த. தார்மீகன் | 05 |
| 7) பலவகை ஒலிகள் | கு. நிதூசனா | 06 |
| 8) கடல் அன்னை | கௌசிகா சந்திரன் | 07 |
| 9) விடுகதை | ஜ.பகீரதன் | 08 |
| 10) கல்வியின் பயன் | T.தனுஷா | 09 |
| 11) கவித்துளிகள் | எஸ்.சிவநந்தினி<br>கு. டுவாரகா | 10 |
| 12) பூமித்தாய் | T.தனுஷா | 11 |
| 13) விடுகதைகள் | ஃ.ஃப்ரான்சிஸ் | 11 |
| 14) 2008 மே மாத பத்திரிகைச் செய்திகளில் சில | வீ.நேகன் | 12 |
| 15) 2008 மே மாதத்தில் எமது வித்தியாலயத்தில் நடந்தவை.... | | 14 |
| 16) நிகழ்வுகளின் சாட்சிகள் | | 16 |
| 17) உலக வரலாற்றில் மே மாதத்தில் நடந்தவை | சந்துரு | 17 |
| 18) பொது அறிவு | சி.ஞானப்பிரியா | 21 |
| 19) எங்கள் தூரிகைகளில் இருந்து..... | | 22 |
| பொது அறிவுப் போட்டி | | 25 |
| விநோதப்புதிர்ப் போட்டி | | 26 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது குடும்பம்

எனது குடும்பம் மிகவும் மகிழ்ச்சியான குடும்பம். எனது குடும்பத்தில் சண்டை, பொறாமை எதுவும் கிடையாது. நாம் எப்பொழுதும் மகிழ்ச்சியாகவே இருப்போம். சண்டை எம்மிடையே வந்ததேயில்லை. அனைவரும் எம்மைப் பார்த்து ஆச்சரியப் படுவார்கள். இப்படியும் ஒரு குடும்பமாக என்று சொல்வார்கள் நமக்குள் போட்டி பொறாமை சண்டை எதுவும் இருக்காது. எனக்கே எனது குடும்பத்தைப் பார்க்க சந்தோசமாக இருக்கும். எனது அம்மா அப்பாவின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. நாம் அமைதியாக இருப்பதைப் பார்த்து அவர்கள் சந்தோசப்படுவார்கள். நாம் வறுமையாக இருந்தாலும் நமக்குள் வறுமை தெரிவதில்லை. உணவு சமைத்தால் பகிர்ந்து சாப்பிடுவோம். நாம் காலையில் பாடசாலைக்குச் செல்லும் போது எமக்கு அம்மா உணவு சமைத்துத் தருவா. அந்த உணவை கட்டிக்கொண்டு பாடசாலைக்குச் செல்வோம். பாடசாலை விட்டு வீடு சென்றவுடன் நமக்கு ஆடைதந்து கால், முகம் கழுவிவிட்டு வாங்கோஎன்று கூறி எம்மை வழிகாட்டுவார். கால், முகம் கழுவியபின்னர் உணவுதந்து நாம் உணவுஉண்ட பின்தான் அம்மா உண்பார்கள். அவர்களும் உணவு உண்டபின் எமக்குப் பாடசாலையில் வீட்டுவேலை தந்தால் அதைச் செய்யச் சொல்வார்; அல்லது புத்தகங்களை வாசிக்கச் சொல்வார். நாம் வாசித்து முடித்தபின் விளையாடச் சொல்வார் அல்லது நூலகத்துக்குப் போகச் சொல்வார். நூலகத்துக்குப் போய்விட்டு வீடுதிரும்பிய பின் கால், முகம் கழுவி வந்ததும் அம்மா எம்மை சுவாமி அறைக்குள் அழைத்துச் சென்று தேவாரம் படித்தபின் விபூதி அணிந்து படிக்கவிடுவார். சுமார் 8மணிவரை படிக்கவிடுவார். படித்து முடித்தபின் கையைக் கழுவிவிட்டு வரும்படி கூறி உணவு தருவார். உணவு உண்டபின் மீண்டும் படிக்க விடுவார். சுமார் 10மணிவரை படிக்கவிடுவார். படித்து முடித்தபின் தூங்கச் சொல்லுவார். இப்படியெல்லாம் இருக்கும்போது பரீட்சை நெருங்குகிறது. என்றவுடன்தான் எனது அம்மா எங்களை விளையாடச் செல்ல வேண்டாம் என்றுகூறி எம்மை 11மணிவரை படிக்கும்படி கூறுவார். 11மணிவரை படித்துப் பரீட்சையில் சித்தி பெற்றதும் எமது அம்மா, அப்பா, சகோதரர்களின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லாதிருக்கும். அதற்காகவே நான் பதினொரு மணிவரை படிப்பதுண்டு. இப்பொழுது கஷ்டப்பட்டால் தான் எதிர்காலத்தில் சந்தோஷமாக இருக்கலாம் என்று அம்மா அடிக்கடி கூறுவார். நாமும் அதனை நம்புகின்றோம்.

செ.கோபினா
தரம் 8B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபத்தால் மரணமா?

கோபத்தினால் ஒவ்வொருவரும் எதையெல்லாம் இழந்திருக்கின்றோம் என்பது கெட்ட அனுபவமாகக் கிடைத்திருக்கும். வாழ்க்கையை வெற்றிகரமாக அனுபவித்து வாழ்பவர்களைக் கொஞ்சம் உற்றுக் கவனியுங்கள். ஒருவிடயம் நன்றாகப் புலப்படும்; வாழ்க்கையை இரசிப்பவர்கள் கோபப்படுவதில்லை; உரத்துப் பேசுவதில்லை; மென்மையான சுபாவத்தைக் கொண்டும், சின்னச்சின்ன சிரிப்பின் மூலமும் பெரிய பெரிய காரியங்களை சர்வ சாதாரணமாகச் சாதித்து விடுகிறார்கள்.

கோபம் மிகவும் கொடியது என்று ஒவ்வொருவருக்கும் சொல்ல வேண்டிய தில்லை. எல்லாத் தீயகுணங் களுக்கும் மூத்த சகோதரியான இந்தக் கோபத்தை நாம் கொன்றுவிட வேண்டும். இல்லை யென்றால் கட்டுக்கடங்காத கோபம் எம்மையே ஒருநாள் கொன்றுவிடும். உணர்ச்சி நிலையில் மனம் கொந்தளிக்கும் போது அறிவின் வேகம் வினாடிக்கு 14 சுற்றுக்கு மேல் செல்கிறது. கோபத்தில் 25முதல் 30சுற்று வரைக்கும் உயருகிறது. சுழற்சி வேகம் அதிகரிக்க அதிகரிக்க உயிருக்கு ஆபத்தே! இந்த சுழற்சிவேகம் அதிகரித்து வினாடிக்கு 40சுற்று என்ற அளவினை நெருங்கினால் உயிராற்றலின் வலிமையை உடலால் தாங்கிக்கொள்ள முடியாமல் போகும். சக்தியின் அபரிதமான வெளியேற்றத்தால் உடலை இயக்க வேண்டிய அளவும் செறிவும் குறைகிறது. உயிர் ஆற்றலின் அளவும் செறிவும் குறைந்து போகவே மரணம் நிகழ்கிறது.

**தொகுப்பு:**
**எஸ்.மைதிலி**
**10B**

---

# பொன் மொழிகள்

- சுகமும் துக்கமும் இரட்டைக் குழந்தைகள்.
- தன்னை அடக்கி ஆளுதல் வேண்டும்.
- உங்களுக்கு ஒரு குறையுமில்லை உங்களை இன்னார் என்று அறியாததுதான் குறை.
- அறிவை அறிவால் அறிய வேண்டும்.
- போனவற்றை நினையாதே.
- விடாமுயற்சி வெற்றியைத் தரும்.
- பிறந்த நாட்டைப் பெற்ற தாய்போல் நேசியுங்கள்.
- ''எம்மதமும் சம்மதம்'' எல்லா மதத்தையும் நேசியுங்கள்.
- எல்லோரையும் சகோதர உணர்வுடன் நேசியுங்கள்.
- தனது பணிகளைத் தானே செய்து கொள்ளுங்கள்.

**தொகுப்பு:-**
**இ.றஜீவா**
**6B**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானும் எனது பாடசாலைக் கண்காட்சியும்

எமது மாணவர்களின் ஆக்கத்திறன் கண்காட்சி கடந்த 28.05.2008 வெள்ளிக்கிழமை எமது வித்தியாலயத்தில் நடைபெற்றது. இக்கண்காட்சியைப் பார்வையிட அயற் பாடசாலைகளிலிருந்து பல மாணவர்களும் ஆசிரியர்களும் வருகைதந்திருந்தனர். அத்துடன் பல பெற்றோரும் வந்திருந்தனர். இக்கண்காட்சியை சிறப்பிப்பதற்கு பிரதம விருந்தினராக எமது கோட்டக்கல்வி அதிகாரி திரு. நா.சத்தியநாதன் அவர்கள் வந்திருந்தார்கள். அவர்களோடு சிறப்பு விருந்தினராக எமது பாடசாலை பழைய மாணவர் திரு.தங்கவேலு அவர்களும் வந்திருந்தனர். அவர்களை எமது பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் வரவேற்றனர். பிரதம விருந்தினர் உரையாற்றியபோது எமது பாடசாலை பற்றி மிகவும் உயர்வாக உரையாற்றினார். அதேபோல் சிறப்பு விருந்தினரும் உரையாற்றினார்.

எமது இக்கண்காட்சியை பிரதம விருந்தினராக வந்திருந்த கோட்டக்கல்வி அதிகாரி திரு. நா.சத்தியநாதன் அவர்கள் திறந்து வைத்ததுடன், விஞ்ஞான பாடத்துடன் தொடர்பான காட்சி அறைக்கு மாணவர்களின் ஆக்கத்திறனைப் பார்வையிட மிகவும் ஆர்வத்துடன் வந்தார். அங்குதான் நான் நின்றேன். அனைத்துப் பொருட்களையும் பார்வையிட்டார். நானும் எனது ஆக்கப் பொருட்களுடன் சூரிய கிரகணம், சந்திர கிரகணம் எப்படி வருகிறது என விளக்கம்தர ஆயத்தமாக இருந்தேன். பிரதம விருந்தினர் என் அருகில்வந்து என்னைத் தட்டினார். நான் என்ன கூறுவது எனப் பயந்தேன். பயத்துடன் விளக்கம் கூறினேன். அவர் சிரித்துவிட்டு அகன்றார். அதன் பின்பு மாணவர்களும் ஆசிரியர்களும் பெற்றோரும் எமது ஆக்கத்திறனைப் பார்க்க மிகவும் ஆர்வத்துடன் வந்தனர். அவர்கள் வந்து என்னிடம் இது என்ன? என்று கேட்டனர். நான் அதற்கு சூரிய கிரகணம், சந்திர கிரகணம் எப்படி ஏற்படுகிறது? என்பதை இது விளக்குகிறது என்றுகூறி செய்து காட்டினேன். அவர்களும் மகிழ்ச்சியுடன் விளக்கம் பெற்றுச் சென்றனர். பின்னர் எனக்குப் பக்கத்தில் இருந்த எனது நண்பரிடம் விளக்கம் கேட்டனர். அவரும் அவர்களுக்கு நன்றாக விளக்கம் கூறிய பின்பு எமது அறைக்கு அடுத்ததாக இருந்த வாழ்க்கைத்திறன் வகுப்பறைக்குச் சென்றார்கள். அதன்பின் பிற பாடசாலை மாணவர்கள் வருகை தந்தனர். வெளிச்சக்கூடு, அடுத்திருந்த மின்மணி மற்றும் தொலைக்காட்டி, இராசி வட்டப்பிற கோள்கள், புவியில் இருக்கும் கண்டங்கள் சமுத்திரங்கள் பற்றியும் அவர்களுக்கு விளக்கம் வழங்கப்பட்டது. மாணவர்கள் கூட்டம் கூட்டமாக விளக்கம் கேட்க, நானும் கூறிக்கூறிக் களைத்தபோது, எனது நண்பர்கள் என்னைத் தேடி வந்தனர். அவர்களுடன் செல்ல பொறுப்பான ஆசிரியரிடம் அனுமதி கேட்டேன். ஆசிரியர் அனுமதி தந்தபின்பு நண்பர்களுடன் சென்று சாப்பிட்டுவிட்டு ஏனையபாட ஆக்கங்களைப் பார்க்க நாம் அனைவரும் சென்றோம்.

முதலாவதாக வாழ்க்கைத்திறன் அறைக்கு நாம் சென்றபோது அங்குள்ள பொருட்கள் எல்லாவற்றையும் பார்த்து ஆச்சரியப்பட்டோம். ஒவ்வொரு பொருட்களும் வெவ்வேறு விதங்களில் ஆக்கப்பட்டு இருப்பதை அவதானிக்க முடிந்தது. அவை மட்டுமல்ல. அங்குபல சித்திர ஆக்கங்களும் காணப்பட்டன. அந்தச் சித்திர ஆக்கங்களுக்குப் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறங்களில் வர்ணங்கள் தீட்டப் பட்டிருந்ததையும் அவதானித்தோம். அவை மிக அழகாக காட்சிப்படுத்தப் பட்டிருந்தன. அடுத்ததாக முதலாம் வகுப்பு மாணவர்களின் ஆக்கங்களைப் பார்க்கச் சென்றோம். அங்கும் பல பொருட்கள் இருந்தன. அவற்றைப் பார்த்துவிட்டு இரண்டாம் வகுப்பு மாணவர்களின் ஆக்கப் பொருட்களையும் பார்த்துவிட்டு அடுத்ததாக மூன்றாம் வகுப்பு மாணவர்களின் ஆக்கப் பொருட்களைப் பார்க்க வரும்போது தென்னம் பாளையில் மிகவும் அழகாக கப்பல் ஒன்று செய்யப்பட்டிருந்தது. அதைப் பார்த்து மகிழ்ந்தோம். அவ்வகுப்பு முழுவதும் நல்ல கருத்துக்கள் எழுதி ஒட்டப்பட்டிருந்தன. அவைகளை வாசித்துவிட்டு அடுத்ததாக நான்காம் வகுப்பு மாணவர்களின் ஆக்கங்களைப் பார்வையிட்டோம். தரம் ஐந்து வகுப்பு மாணவர்களின் ஆக்கங்களில் கச்சான் கோதால் ஒட்டப்பட்ட பூ, கழிவுத்துணியால் ஒட்டப்பட்ட பூ, மரவேரால் செய்யப்பட்ட மிருகங்கள் என்பன மிகவும் அழகோடு காணப்பட்டன. அடுத்து, தமிழ்ப் பாடத்துடன் சேர்ந்த காட்சி அறைக்குச் சென்றபோது அங்குபல கவிதைகள் எழுதப் பட்டிருந்தது. அவை மிகமிக இரசனையுணர்வோடு இருந்தது. அவற்றைப் பார்த்துவிட்டு அடுத்து வரலாறு சார்ந்த பாட அறைக்குச் சென்றபோது பல மன்னர்களின் படங்களும் அவர்களின் பெயர்களும் எழுதப்பட்டிருந்தன. அவற்றுடன் நான் செய்துகொடுத்த ஆக்கமும் அங்கு இருந்தது. அதனைப் பார்த்தவுடன் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. அந்த மகிழ்ச்சியோடு நான் எனது நண்பர்களிடம் இருந்து பிரிந்து, மீண்டும் விஞ்ஞானபாடக் காட்சியறைக்கு நடக்க ஆரம்பித்தேன்.

**S.Sanjeevan**
**8A**

## சுனாமி 26.12.2004

பிரளயங்கள், உலக அழிவுகளை நாம் வரலாறுகளிலும், கதைகளிலும் படித்திருக்கிறோம்.

எம் காலத்தில் நாம் பார்த்த இயற்கை அழிவு சுனாமி. எத்தனை கொடுமை! எத்தனை உயிர் இழப்புக்கள்! எவ்வளவு அழிவுகள்! அத்தனையும் ஒருசில நிமிடங்களுக்குள்.

யாரை நோவது யார்க் கெடுத்துரைப்பது? உயிரையே அள்ளிச்சென்ற கோரம் கண்ணை விட்டகலாது.

நாம் கையெடுத்துக் கும்பிட்ட கடலம்மா! - உயிரோடு
மெய் எடுத்துப் போனதேனோ சொல்லம்மா?

கடல்தாயே நீ கொண்டு சென்றது எம் உயிர்களை மட்டுமல்ல எங்கள் கனவுகள், ஆசைகள் எல்லாவற்றையும் அடியோடு அள்ளிச் சென்றுவிட்டாய். அம்மா.

நீ செய்த கொடுமைகள், இழப்புக்கள், அழிவுகள் இவை எல்லாவற்றிற்கும் மேலாக நீயும் ஒருநாள் கண்ணீர் வடிக்கத்தான் போகிறாய் அம்மா.

**R.Rakilan**
**10B**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பாடசாலைக் கண்காட்சியில் இசையறை

எமது பாடசாலை மாணவர்களுடைய ஆக்கத்திறன், கண்காட்சி 23.05.2008 வெள்ளிக்கிழமை அன்று எமது பாடசாலையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக எமது கோட்டக்கல்வி அதிகாரி உயர்திரு. நா.சத்தியநாதன் அவர்களும் சிறப்பு விருந்தினராக எமது வித்தியாலய பழைய மாணவர் திரு. தங்கவேல் அவர்களும் வருகைதந்தனர். பிரதம விருந்தினரால் மாணவர்களுடைய ஆக்கத்திறன் கண்காட்சி காலை 9.10மணிக்குத் திறந்து வைக்கப்பட்டது. முன்னதாக விஞ்ஞான ஆய்வுகூடத்தின் முன்பகுதியில் ஆரம்பக்கூட்டம் நடந்தது.

முதலில் இறைவணக்கத்தைத் தொடர்ந்து பாடசாலைக்கீதம் பாடும்போது மாணவர்கள் நிமிர்ந்து நின்று கைகளை நேராகவிட்டு மரியாதை செலுத்தினர். அடுத்து அதிபர் உரை இடம்பெற்ற பின்னர் பிரதம விருந்தினர் உரையாற்றினார். அவர்தம் உரையில் எங்கள் பாடசாலையைப் பற்றி உயர்வாக எடுத்துரைத்தார். சிறப்பு விருந்தினரும் அவ்வாறு உரையாற்றியதைத் தொடர்ந்து ஆக்கத்திறன் கண்காட்சி திறந்து வைக்கப்பட்டது. முதன்முதலில் விஞ்ஞான பாடத்திற்கான காட்சி அறைக்குள் சென்று அங்கிருந்த மின்மணி, புவிச்சுழற்சி, சுவாசத் தொகுதியின் படம், குருதிச் சுற்றோட்டத் தொகுதியின் படம் - அதற்குப் பல வர்ணங்களில் விபரங்கள் குறிக்கப்பட்டு மிக அழகாக அமைக்கப்பட்டிருந்தது. அவர்கள் அதை மிக சந்தோசத்துடன் பார்த்து இரசித்தனர்.

அதன்பின்னர் வாழ்க்கைத் தேர்ச்சிப் பாடத்திற்கான காட்சிப்படுத்தல் அறை அங்கு படங்களையும், முகமூடிகளையும், சவர்க்கடிகாரத்தால் செதுக்கப்பட்ட சிற்பங்களையும் பார்வையிடக்கூடியதாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. ஆரம்பக் கல்வி மாணவர்களின் தயாரிப்பில் அழகான படங்களும் 5ம் தர மாணவர்களின் ஆக்கங்களில் சிறப்பாக இருந்த வேரினால் உருவாக்கப்பட்ட விலங்குகளும் மிக வியப்பைத் தருவதானவாகக் காணப்பட்டன. தரம் ஐந்து மாணவர்கள் மிக உற்சாகத்துடன் காணப்பட்டனர். அவர்களது மகிழ்ச்சியை இரசித்தபடி விருந்தினர்களும் பார்வையாளர்களும் எங்களுடைய சங்கீதபாட அறைக்குள் நுழைந்தனர். விருந்தினர்கள் வந்தபோது அவர்களை இசைக் கருவிகளை இசைத்து நாம் வரவேற்றோம். நான் அங்குதான் இருந்தேன். விருந்தினர்களில் ஒருவர் எனது அருகில் இருந்த மாணவியை எழுபத்தி இரண்டு மேளகர்த்தா இராகங்களையும் விளங்கப்படுத்தச் சொன்னார். அந்த மாணவி மிக சுறுசுறுப்பாகவும் சந்தோசத்துடனும் விளங்கப்படுத்தினார். எனக்கு அருகில் நின்ற மாணவனை ஏழு ஸ்வரங்களையும் அதன் தமிழ்ப் பெயர்களையும் விளங்கப்படுத்தச் சொல்லி ஒரு விருந்தினர் கேட்டார். அந்த மாணவன் மிக சுறுசுறுப்பாக விளங்கப்படுத்தினார். அடுத்ததாக என் முன்வந்து நின்று மிக நிதானமாகவும் ஆர்வத்துடனும் ஸ்ருதியைப் பற்றிக் கேள்விகேட்டனர். நான் அவர்களுக்கு மிக மகிழ்ச்சியுடன் விடைகளை அளித்தேன். அவர்கள் மிக சந்தோசம் அடைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் சங்கீதப்பாட காட்சிப்படுத்தல் அறைக்குள் பல பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டு இருந்தன. ஸ்ருதி, எக்கோடியன், உடுக்கு, கிளையினால் செய்யப்பட்ட இசைக்கருவிகள் என்பவற்றுடன் 72 மேளகர்த்தா இராகங்கள், 7 ஸ்வரங்கள், அதன் தமிழ்ப் பெயர்களும், 18ம் நூற்றாண்டில் இசையை வளர்த்த மும்மூர்த்திகளும் மாணவர்களால் வரையப்பட்டு, அவற்றையும் காட்சிப்படுத்தி இருந்தோம். வயலீன் வாசித்துக் காட்டும்படி விருந்தினர் கேட்டனர்.

பின்பு யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை மாணவர்களும் ஆசிரியர் களும் வருகை தந்தபோது அவர்களுக்கு மரியாதை செலுத்தி வரவேற்றோம். பின்பு யா/ கைதடி விக்னேஸ்வரா பாடசாலை, யா/ கைதடி முத்துக்குமாரசாமி பாடசாலை மாணவர்கள் வருகைதந்த போது நாங்கள் மரியாதை செலுத்தி வரவேற்று அவர்களுக்குப் போதிய விளக்கத்தை வழங்கினோம். இந்த நிலையில் எனக்குப் பசியெடுக்க, நான் எனது பொறுப்பை வேறொரு மாணவரிடம் கொடுத்துவிட்டு கண்காட்சி அறையை விட்டு பெருமித உணர்வோடு அகன்றேன்.

த.தார்மீகன்
தரம் 8A

# Different Sounds
## பலவகை ஒலிகள்

1. Cuckoos Coo - குயில்கள் கூவுகின்றன
2. Tigers growl - புலிகள் உறுமுகின்றன
3. Owls hoot - ஆந்தைகள் அலறுகின்றன
4. Horses heigh - குதிரைகள் கனைக்கின்றன
5. Frogs Croak - தவளைகள் கத்துகின்றன
6. Bears browl - கரடிகள் உறுமுகின்றன
7. Bees hum - தேனீக்களின் ரீங்காரம்
8. Dogs bark - நாய்கள் குரைக்கின்றன
9. Elephants trumpet - யானைகள் பிளிறுகின்றன
10. Jackal howl - நரிகள் ஊளையிடுகின்றன
11. Asses bray - கழுதைகள் கத்துகின்றன
12. Lions roar - சிங்கங்கள் கர்சிக்கின்றன
13. Vultures scream - கழுகுகள் அலறுகின்றன
14. Larks sing - வானம்பாடிகள் பாடுகின்றன
15. Man Cries - மனிதன் கத்துகிறான்

**Nithushana Kugathevan**
**9A**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் அன்னை

அன்னையின் மடியில் தவழ்ந்த குழந்தைகள் - இன்று
ஆதரவற்றுக் கிடக்கின்றன - வேலியோரங்களில்

இயற்கையின் வனப்பை அழிக்க வந்தாள் அவள் - கோரங்கொண்டு
ஈரவிழிகளுடன் இருக்கின்றன ஆதரிப்பாரின்றி அவை

உல்லாசப் பிரயாணிகளைக் கவர்ந்த எம்நாட்டை - இன்று
ஊமையாக்கி விட்டாய் கடலன்னையே

எண்ணங்களுடன் இருந்த எம் மக்களை - இன்று
ஏங்கித் தவிக்கவிட்டாய் உன் சீற்றத்தால்

ஐயிரண்டு மாதங்கள் பெற்றெடுத்த எம் குழந்தைகளை இன்று
ஒப்பாரி செய்து ஒடுக்கிவிட்டு விட்டாயே

ஓலங்களைக் காண்பது உன் கனவா - கடலன்னையே
ஔடதம் போலிருந்த செல்வங்களை - அழித்துவிட்டாயே

கன்னியர்களின் மனதைப் பறித்த - உனக்கு
கன்னியரின் கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்

கம்பனும் சொல்லாக் கற்பனையால் நீ கீதம் பாடினாய் - அது
கன்னியரைக் கதிகலங்கச் செய்துவிட்டது

சின்னஞ் சிறார்களின் மழலைச் சிரிப்பு பிடிக்கவில்லையா - நீர் எனும்
சிறகு கொண்டு உன் அடியில் அடக்கிவிட்டாய் அவர்களை

பால் குடித்த எம் குழந்தைகளை - நாம்
பார்த்துக் கொண்டு நிற்க அள்ளிச் சென்றாயே

கட்டடங்கள் கீரைக் களனிகளை - அன்று
கவர்ந்து சென்றாயே - உன் ஆவேசத்தால்

பொக்கிசங்களாக இருந்த எம் முதியவர்களின் மேல் - நொடியில்
பொங்கியெழுந்த போது உன்மனம் கல்லாகிவிட்டதோ?

நாடு போற்றும் நம் தலைவர்களை நீ
நாதியற்றவர்களாக்கினாயே கடலன்னையே

கூண்டுக்கிளி போலிருந்த எம் குடும்பத்தை - நீ
கூவியழைதது அடிவரை கொண்டு சென்றாயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று பனைபோல் எழுந்த உன் அலைகள் - எம்மை
ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டதை அறிவாயோ?

மாசற்ற எம் பெற்றோரை இன்று - நீ
மாழவிட்டாயே உன் நீரில்

வாழவைத்த நீ இன்று எம்மை
வாழாவெட்டியாக்கிவிட்டாயே

காதலர்களை வரவழைத்த உன் அழகு இன்று அவர்களை
காட்டிற்கு அழைத்துச் சென்றுவிட்டது கன்னியாக

இறைவனை வணங்கிய எம் உள்ளங்கள் - இன்று
இறைஞ்சுகின்றன எம் உறவுகளின் ஆத்மா சாந்திக்காக

அள்ளி அள்ளித்தந்த அன்னையே - இன்று
அள்ளிக் கொண்டு போனாயே அத்தனையையும்

கௌசிகா சந்திரன்
தரம் - 13

---

# விடுகதை

1. கொக்கு நிற்க குளம் வற்றுது?
2. வட்ட வட்டப் பாதையில் இட்டது எல்லாம் பாம்புக்குட்டி
3. கறுப்புக் கோட்டுக்காரன் காவலுக்குக் கெட்டிக்காரன்
4. சாம்பார் மணப்பதேன் படைவீரர் சாவதேன்?
5. எருமைக்கன்று கத்துவதேன் எருக்கமிலை காய்வதேன்?
6. குதிரை ஓடஓட வால் குறையுது
7. ஒரு நெல் குத்தினாள் ஊரெல்லாம் வெளிச்சம்
8. ஒரு பாத்திரத்தில் இருகுட்டிகள்
9. கறுப்பு பங்களாவில் வெள்ளை மெத்தையில் கறுப்புத்துரை தூங்கிறார்
10. உடம்பு உண்டு உயிர் இல்லை, கழுத்துண்டு தலையில்லை, கையுண்டு விரல் இல்லை, கண் உண்டு விழி இல்லை.
11. டாங்கு டுங்கு மரம். டன்டாங்கு பட்டமரம். இரும்பு தழைச்ச மரம். எல்லோரும் ஏறும்மரம்
12. ஏறுஏறு சங்கிலி இறங்கு இறங்கு சங்கிலி எட்டாத கொப்பெல்லாம் எட்டிவா சங்கிலி

ஐ.பகீரதன்
தரம் 10A

1. விளக்கு
2. இடியப்பம்
3. பூட்டு
4. பெருங்காயம்
5. பால் வற்றுவதால்
6. ஊசி நூல்
7. விளக்கு
8. முட்டை
9. சீத்தாப்பழம்
10. சேட்டு (சட்டை)
11. புகையிரதம்
12. அணில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் பயன்

செல்வங்களுள் சிறந்த செல்வம் கல்விச்செல்வம் என்பது யாராலும் மறுக்க முடியாத உண்மையாகும்.

கல்விச் செல்வமானது ''மிகமிக'' சிறந்த செல்வம் ஆகும். அதனால்த்தான் வள்ளுவர் கேடில் விழிச்செல்வம் என்று மிகவும் சிறப்பாக விளித்துக் கூறியுள்ளார்.

பிற செல்வமானது அழிந்துவிடும். ஆனால் கல்விச்செல்வம் ஆனது வெள்ளத்தால் அழியாது, நெருப்பினால் வேகாது, கள்வர்களால் கொள்ளையிட முடியாது. இவ்வாறு அழிவில்லாக் கல்விச் செல்வத்தை நாம் நம் இரண்டு கண்களிலும் மேலாகக் காக்க வேண்டும்.

செல்வங்களுள் சிறந்த செல்வமாகிய கல்விச் செல்வத்தைத் திருவள்ளுவர், சேக்கிளார், ஔவையார், மங்கையற்கரசியார், கம்பர் போன்ற பெரியார்கள் பல நூல்களில் கல்வியின் பெருமையையும் அதன் அளவற்ற பயன்களையும் ''மிகமிக'' அழகாக எடுத்துக் காட்டியுள்ளனர். 'மன்னனுக்குத் தன் தேசத்தில்த் தான் சிறப்புண்டு கற்றோனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' - ஒரு மன்னனுக்கு அவனுடைய நாட்டில்த்தான் உயர்வு உண்டு. ஆனால் கல்விச் செல்வம் உள்ள ஒருவனுக்கு எங்கு சென்றாலும் சிறப்புண்டு என்கிறார் வள்ளுவப் பெருமான். ஒரு மன்னனையும் கற்றவனையும் சம அளவில் சீர்தூக்கிப் பார்ப்போம். மனால் மன்னனைவிட கற்றவன் உயர்ந்தவன் ஆகின்றான். ''கண்ணுடையோர் என்போர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையோர் கல்லாதவர்'' கல்வி கற்றவனுக்கு முகத்தில் இருப்பது இரண்டும் கண்களே ஆனால் கல்லாதவன் முகத்தில் அவையிரண்டும் புண்களே என்று மிகவும் சிறப்பாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

ஒருவனுடைய கல்வியை இன்னொருவன் களவாட முடியாது. அப்படியானால் அவனுடைய உயிர் எப்போது அழிகின்றதோ அப்போதுதான் அவனுடைய கல்வி அவனை விட்டுச்செல்லும். பிறசெல்வம் கொடுக்கக் கொடுக்கக் குறைந்து கொண்டே செல்லும். ஆனால் கல்விச் செல்வத்தை நாம் பிறருக்குக் கொடுக்கக் கொடுக்கக் கூடுமே தவிர குறைவதில்லை.

ஒருவனிடம் எவ்வளவு பொருள், பெரிய மாளிகைகள், செல்வங்கள் இருந்தாலும், அவை இடையில் அழிந்துவிடும். ஆனால் கல்விச் செல்வம் அப்படியல்ல. ''இடிபோல் இன்னல் வந்தாலும் இஷ்டம்போல் கஷ்டம் வந்தாலும்'' நம்முடன் சேர்ந்தே இருக்கும். ஆனால் செல்வம் வந்தால் உடனே நம்முடன் பட்டு சென்றுவிடும். எண்ணெய் இன்றி நடுக்கடலில் விடப்பட்ட கப்பல்போல் நம்மையும் ஆக்கிவிடும். செல்வம் வைத்திருப்பவர்கள் ஊன், உறக்கம் இன்றி நம் உயிருக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று அச்சத்தோடே தம் வாழ்நாள் முழுவதையும் கழிப்பார்கள். கல்விச்செல்வம் வைத்திருந்த ஒருவன் எவருக்கும் அச்சமின்றி எல்லோரிடத்திலும் அன்பாகவும் பண்பாகவும் அரவணைப்புடனும் மிகவும் சந்தோசத்துடன் வாழ்வைக் கழிப்பான்.

இவ்வாறு சிறப்புமிக்க கல்விச் செல்வத்தைக் கற்று கற்றவாறு ஒழுகுவோமாக.

**T. தனுஷா**
**தரம் 11**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைத்துளிகள்

## தொல்லை

அன்பு காட்டிட அன்னை இல்லை
அறிவூட்டத் தந்தை இல்லை
அரவணைக்க சொந்தம் இல்லை
சமாதானம் தொலைந்ததால்
தொடர்கிறது தொல்லை

## வெட்கம்

இப்படி ஒரு சமுதாயத்தில்
பிறந்து விட்டோமே என்று
எண்ணி நீ வெட்கப்பட்டு
உன் முகத்தினை
மூடிக் கொண்டாயோ?



## உபதேசம்



வருவன வரட்டும்
உயர்வன உயரட்டும்
எதையும் பாராது
கண்மூடி மௌனமாய்
காலத்தைக் கடந்து சென்றால்...
வழி வேறில்லை
கண்ணைப் பறிக்கும் மின்னல்
மின்சாரமாய்த் தாக்குவதால்
தருமத்தின் பெயரால் அதைத்
தடுத்து நிறுத்துங்கள்

எஸ்.சிவறஞ்சினி
9B
கைதடி

## கொள்ளை போகும் மனது

வெள்ளை உடை அணிந்து - தினம்
விடியமுன்னே புறப்பட்டு
பிள்ளையுடன் செல்லும் - இந்த
பாவை யிவள் யாரோ?

துள்ளித் துள்ளிச் செல்லும் - அவள்
கொலு செழுப்பும் ஓசை அது
அள்ளியென் மனதினையே - எங்கோ
கொள்ளை கொண்டு போகுதடி

கு.டுவாரதா
7A



## என் வாழ்வே நீதான்

முல்லை பூவாய் முகத்தில் சிரிப்பு
தொல்லை இல்லா உள்ளத் தெளிவு
கனவில் கூட உன் முக தரிசனம்
காணும் போதினில் கவலைகள் மறையும்

நிழலை நிஜமென நினைக்கும் மனது
நிலவைப் பிடித்திட அடமது பிடிக்கும்
கண்ணே எந்தன் வாழ்வே நீதான்
கண்ணின் மணிபோல் உன்னைக்
காப்பேன்

R. தேனுஷா
7A





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமித்தாய்



புரியாத வாழ்வைப்
புனிதமாய் புரியவைத்தாய்
வாழ்வு மட்டும்
வெறுமை என்றிருந்தேன்
என்னைப் பொறுமை ஆக்கினாய்
எனக்குத் தெரியாமலே
என்னை அறியவைத்தாய்
அறிந்ததைப் புரியவைத்தாய்
என்னை அன்போடு ஆதரித்தாய் - நான்
அழும்போது என் கண்ணீர் துடைத்தாய்
கலையின் பேரின்பம் புரியவைத்தாய்
கலைமட்டும் இல்லை என்றால்
எனக்கு கவிதை ஏது?
கலைகள் இன்றி கற்பனைகள் வராது
எனக்கு கவிதைகள் தான் கலையானது
இன்பமும் இதுவே
என் வாழ்க்கையும் இதுவே.



**Thanusha. T**
**O/L**

# விடுகதைகள்

1. அடிக்காத தடி என்ன தடி?
2. வெடிக்காத குண்டு என்ன குண்டு?
3. அவியாத மா என்ன மா?
4. உண்ணமுடியாத வறை என்ன வறை?
5. பட்டமரத்தில் ஒருபழம் அது என்ன?
6. சின்னமச்சான் குனிய வச்சான் அவன் யார்?
7. வெட்டாத கத்தி என்ன கத்தி?
8. கதைக்காத பிள்ளை என்ன பிள்ளை?
9. மிருகங்களுக்கு இல்லாத வால் என்ன வரல்?
10. பூசாத டை என்ன டை?

1.கைதடி
2.செம்பங்குண்டு
3.சினிமா
4.ஏவறை
5.ஐஸ்பழம்
6.முள்
7.அகத்தி
8.தென்னம்பிள்ளை
9.வெளவால்
10.சட்டை

**ஸ்ரீபன் ஸ்ராலின்**
**தரம் 5A**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2008 மே மாதத்தில் வந்த பத்திரிகைச் செய்திகளில் சில....

01. கால்கள் இல்லாத பல்லி - பிரேசில் நாட்டில் கண்டுபிடிப்பு

கால் இல்லாத பல்லி உள்ளிட்ட பன்னிரு அரியவகை உயிரினங்களை பிரேசில் விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். இவையனைத்தும் பிரேசில் நாட்டில் உள்ள சிராடோ புல்வெளிப் பிர தேசத்திலிருந்து கண்டுபிடிக்கப் பட்டுள்ளன என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

7160 சதுர கிலோமீற்றர் பரப்புக்கொண்ட சிராடோ புல்வெளிப் பிரதேசத்தில் அமெரிக்கா, மற்றும் பிரேசில் விஞ்ஞானிகள் கூட்டாக ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின்போது பல அரியவகை உயிரினங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அதில் காலில்லாத பல்லி ஒன்று, 8 மீன் வகைகள், 3 ஊரும் பிராணிகள், ஒரு பாலூட்டி ஆகியன அடங்கும் இத்தகவல் சர்வதேச சுற்றுச்சூழல் அமைப்பு வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

02. பெரும் சத்தத்துடன் விளம் பரங்கள் - இந்தியாவில் தடை

தொலைக்காட்சி ஒளிபரப்புக்களில் அலறும் விளம்பரங்களுக்குத் தடை விதிக்க இந்தியாவிற்கு பிரிட்டிஸ் உதவி செய்ய முடிவுசெய்துள்ளது.

தொலைக்காட்சி ஒளிபரப்பின்போது வழக்கமாக இடம்பெறும் நிகழ்ச்சிகளின் போது எந்தஅளவுக்கு ஒலி உள்ளதோ அதேயளவுக்கு விளம்பரத்தின் ஒலி அதிர்வுகளும் இருக்கவேண்டும். எக் காரணம் கொண்டும் கூடுதல் ஒலியுடன் விளம்பரங்களை ஒளிபரப்பக் கூடாது என்று இந்திய அரசு உத்தரவு இட்டுள்ளது. உடனடியாக இந்த உத்தரவை அமுல்ப்படுத்த முடிவாகி யுள்ளது.

03. சூரியனுக்கு விண்கலம். - நாசா தயார்

பால்வெளி மண்டலத்தில் சூரிய கிரகத்தைப்பற்றி ஆய்வு செய்வதற்காக விண்கலம் ஒன்றை அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா 2015ம் ஆண்டில் விண்ணுக்கு ஏவவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 3ஆயிரம் கோடிரூபா செலவில் 2600 டிகிரி பரன்நைட் வெப்பத்தை தகடுகள் மூலம் பாதுகாக்கப்பட்ட விண்கலம் நேர்த்தியான முறையில் சூரியனை அணுகக்கூடிய விதத்தில் விநாடிக்கு 125மைல் வேகத்தில் சூரியனைச் சுற்றிவரக் கூடியவாறு அமெரிக்கா விஞ்ஞானி களால் தயாரிக்கப் பட்டுள்ளதாக நாசா அறிவித்துள்ளது. சூரியன் பற்றிய ஆராய்ச்சிக்கான திட்டமேலாளராக ஆன்ட்ரூ டான்ட்ஸ்லர் நியமிக்கப்பட்டுள்ளார்.

04. டொமினிக்கன் ஜனாதிபதித் தேர்தல் - பெர்னான்ட்ஸ் மீண்டும் தேர்வு

டொமினிக்கன் குடியரசின் ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் லியோனல் பெர்னாண்டஸ் வெற்றி பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொமினிக்கன் குடியரசு ஜனாதிபதி, லியோனல் பெர்ணாண்டஸின் பதவிக்காலம் முடிவடைந்ததையொட்டி புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க 07.05.2008 அன்று திங்கட்கிழமை தேர்தல் நடைபெற்றது. தேர்தலில் நடைபெற்ற வன்முறையில் 8பேர் துப்பாக்கியால் சுடப்பட்டார்கள். 18.05.2008 அன்று செவ்வாய்க்கிழமை வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது.

இதில் தற்போதைய ஜனாதிபதி லியோனல் பெர்ணாண்டஸ் வெற்றி பெற்றார். இதன்மூலம் அவர் 3வது முறையாக ஜனாதிபதி ஆகின்றார்.

05. நேபாளத்தில் ஆட்சி அமைக்க - மாவோயிஸ்டுக்களுக்கு அழைப்பு

நேபாளத்தில் ஆட்சி அமைக்க வருமாறு மாவோயிஸ்டுகளுக்கு பிரதமர் கொய்ராலா அழைப்பு விடுத்துள்ளார். இதனால் நீண்டகாலமாக நீடித்து வந்த இழுபறிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

நேபாளத்தில் அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் கடந்த ஏப்ரல் மாதம் நடந்தது. இதில் மாவோயிஸ்டுகள் 575 இடங்களில் 220 இல் வெற்றிபெற்றனர். இதனால் அவர்களை ஆட்சி அமைக்க வருமாறு பிரதமர் கொய்ராலா அழைப்பு விடுத்தார்.

அவரது அதிகாரபூர்வ இல்லத்தில் ஒரு கூட்டத்துக்கு ஏற்படு செய்யப்பட்டு இருந்தது. இதில் மரவோயிஸ்டு கட்சி கலந்து கொண்டது. அப்போது அவர் ஆட்சி அமைக்குமாறு அழைப்பு விடுத்தார்.

06. உலகில் ஒருமணி நேரத்துக்கு 3 உயிரினங்கள் மடிகின்றன.

உலகில் உள்ள உயிரினங்களில் ஒவ்வொரு மணிநேரத்திற்கும் 3 உயிரினங்கள் அழிந்து வருகின்றது என ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இயற்கை சீரழிவு மற்றும் சூழல் மாசுகுறித்து ஜேர்மனியில் நடந்த மாநாட்டில் 193 நாடுகள் கலந்து கொண்டன. இதில் ஐ.நா. செயலாளர் நாயகம் பாகிமூன் தாக்கல் செய்த அறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப் பட்டுள்ளது. இவ்அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

உலகில் டைனோசர் இனங்கள் அழிந்து 6.5கோடி ஆண்டுகளுக்குப் பின் உயிரினங்கள் அழிவது இப்போதுதான் பெரிதும் அதிகரித்து வருகின்றன. உராங் உட்டான், சிம்பன்சி, யானை உள்ளிட்ட பாலூட்டி உயிரினங்களில் நான்கில் ஒன்று அழிந்து வருகின்றது. அதேபோல் பறவைகளில் எட்டுவகைகளில் ஒன்றும் நீர் மற்றும் நிலத்தில் வசிக்கும் உயிரினங்களில் மூன்றில் ஒருபகுதி வகைகளும் அழிந்து வருகின்றன.

தாவரங்களில் வாழ்நாள் 70 சதவீதமாகக் குறைந்து வருகின்றது. இவை எல்லாவற்றுக்கும் காரணம் மனிதர்களினால் ஏற்பட்டுவரும் மிக அதிகளவான சுற்றுச்சூழல் சீர்கேட்டு நடத்தைகளே. காடுகளை அழிப்பதாலும் உயிரினங்கள் அழிவை நோக்கிச் செல்வதோடு தாவரங்களில் வாழ்நாட்களும் குறையும் என்றும் உணவுப் பற்றாக்குறை அதிகரிக்கும் என்றும் எச்சரிக்கப் பட்டுள்ளது. இவற்றைத் தடுக்காவிட்டால் மனித வாழ்க்கையின் அடிப்படையே அழிந்துவிடும்.

தொகுப்பு
வீ.றேகன்
12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2008 மே மாதத்தில்
# எமது வித்தியாலயத்தில் நடந்தவை...

01. அவசரகால முதலுதவி - செயலமர்வு

29.05.2008 அன்று யா/ நாவற்குழி மகாவித்தியாலயத்தில் காலை 9.30மணிக்கு அதிபர் தலைமையில் அவசரகால முதலுதவி என்னும் தலைப்பில் கலந்துரையாடல் நிகழ்த்துவதற்கு பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் மற்றும் முதலுதவி பயிற்றுநர்கள் இங்கு வருகைதந்தார்.

இறைவணக்கத்தைத் தொடர்ந்து அதிபர் கலந்துரையாடலை தொடக்கி வைத்தார். பின் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் அவர்கள் எவ்வாறான விபத்து சமூகத்தில் ஏற்படுகிறது? அவற்றுக்கு எவ்வாறு முகம்கொடுக்க முடியும்? எனும் விடயங்களைப்பற்றிக் கலந்து கொண்ட 30 மாணவர்களுக்கும் அன்புடனும், நிதானத்துடனும் விளக்கினார். 9.30மணியிலிருந்து 12.00மணிவரை பேராசிரியர் கணேசலிங்கம் அவர்களின் முதலுதவி பற்றிய தெளிவான விளக்கங்கள் தரப்பட்டு சிறிதுநேரத்தின் பின் திரு. இளங்கே அவர்கள் எம்மிடம் பல வினாக்களைக் கேட்டு அவற்றுக்கு விளக்கமளித்தார். பின் 12.00மணிக்கு அவர்களால் எமக்கு உணவுப்பொதி தரப்பட்டது. நாம் அவற்றை உண்டபின் மீண்டும் கலந்துரையாடல் தொடர்ந்தது. இதன்போது, பல செய்முறைகள் மாணவர்களால் நடாத்துவிக்கப்பட்டது. உதாரணமாக, இதயத்துடிப்பை அறிதல், மயங்கிய நிலையில் உள்ளவருக்கு உதவும் வழிகள் என செய்முறைகள் நிகழ்ந்தது. பின் 3.00மணியளவில் பாடசாலை கீதத்துடன் கலந்துரையாடல் முடிவடைந்தது.

**S.Kajaani**
**10A**

02. 2008 இற்கான பாடசாலை அபிவிருத்திச்சங்க பொதுக்கூட்டம் 01.05.2008 அன்று நடைபெற்றது. இவ் அபிவிருத்திச் சங்க உறுப்பினர் தெரிவிலே 2008 இற்கான புதிய தெரிவு நடைபெற்றது. அந்த வகையில் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் விபரம் வருமாறு,

தலைவர்

திருமதி வ.மேகலிங்கம் (அதிபர்)

பிரதித்தலைவர்

திரு. கோ.ஜீவபாலன்

செயலாளர்

திருமதி செ.சந்திரன்

பொருளாளர்

திரு. ப.கிருபானந்தன் (ஆசிரியர்)

இச்சங்கத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஏனைய உறுப்பினர் விபரம் வருமாறு

திரு. இ.இரட்ணாகரன்
திரு. தி.தங்கவேலு
திரு. ப.சிவராசா
திரு. ச.சத்தியராஜ்
திருமதி ப.கௌரி
திருமதி தி.இந்திராதேவி
திரு. ந.ஜெயரூபன் (ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. மு.செங்கையாழியன்
(ஆசிரியர்)

திருமதி நா.செல்வன்
(ஆசிரியர்)

திருமதி மீ.பரமேஸ்வரன்
(ஆசிரியர்)

இவர்கள் 2008இற்கான பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்.

### 03. 2008ம் ஆண்டிற்கான சிறுவர்குழு

2008.05.13 அன்று அதிபருடைய தலைமையில் சிறுவர்குழு அமைப்பதற்கான கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிறுவர் குழுவிற்கான உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். ஒவ்வொரு வகுப்பில் இருந்தும் ஒவ்வொரு உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டு பின் தலைவராக செல்வன் ம.நகுலேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டார். அடுத்து செயலாளராக செல்வி அ.சுவர்ணாவையும் உப செயலாளராக செல்வன் தே.ரெதீபனையும் பொருளாளராக செல்வி செ. றொசாணியையும் தெரிவு செய்தனர். பொறுப்பாசிரியராக திருமதி யோ.பாலச்சந்திரன் ஆசிரியை அவர்களையும் ஏனைய உறுப்பினர்களாக ந.பவதாரணி, யோ.யோககாந்தன், ர.நிதர்சன், வி.சங்கீதா, செ.கேசவன், இ.ராகுலன், சு.சிவானுஜா, சு. பத்மலோசன், சு.கயானி, அ.மரியமலர் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

### 04. ஆரம்பப்பிரிவு மாணவர்களது களப்பயணம்

சென்ற 14.05.2008 அன்று காலை 8.30மணிக்கு தரம் 1-3 வரையான மாணவர்களும் ஆசிரியர்களும் 3 பெற்றோரும் தனியார் சிற்றூர்தி ஒன்றில் களப்பயணத்தை ஆரம்பித்தோம். முதலில் நல்லூர் கந்தசாமி கோயிலுக்குச் சென்றோம். அங்கு இறைவனை வழிபட்ட பின்னர் நாவலர் கலாசார மண்டபத்திற்குச் சென்றோம். அங்கு சென்று அரும்காட்சியகத்தில் வைத்துப் பேணப்பட்டுள்ள தொல்பொருட் சான்றுகளைப் பார்வையிட்டோம். பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணத்திலுள்ள பிரதம தபாலகத்திற்குச் சென்று அங்கு நடைபெறும் செயற்பாடுகளைப் பார்வையிட்டோம். இறுதியாக யாழ் நூலகத்திற்குச் சென்று நூலகத்தினைப் பார்வையிட்டபின்னர் பி.ப. 12.30 மணியளவில் களப்பயணத்தை முடித்து பாடசாலையை வந்தடைந்தோம்.

தொகுப்பு
தரம் 3 மாணவர்கள்



ர.நிதர்சன்
தரம் 7A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நிகழ்வுகளின் காட்சிகள்



உயர்தர மாணவர் ஒன்று கூடலின் போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் திரு.க.சண்முகலிங்கம் அவர்களுடன் சிறப்பு விருந்தினர் இரட்ணாகரன் அவர்களும் எமது வித்தியாலய அதிபர் அவர்களும் விருந்துபசாரத்தில் கலந்து கொள்கின்றனர்.



பொருளாதார வசதி குறைந்த ஒரு தொகுதி மாணவர்களுக்கு Y.M.C.A அமைப்பினர் பாதணிகள் வழங்கும் நிகழ்வின் காட்சி இது. மாணவர் ஒருவர் பாதணிகளைப் பெறுகிறார்.
இந்நிகழ்வு மே - 30.2008ல் எமது பாடசாலையில் நடைபெற்றது.



உயர்தர மாணவர் ஒன்று கூடலில் நிகழ்வினை (15.05.2008) பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மக்கள் வங்கி சாவகச்சேரிக்கிளை முகாமையாளர் திரு.க.சண்முகலிங்கம் அவர்கள் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகவரலாற்றில் மே மாதத்தில் நடந்தவைகளில் சில....

**மே 01-1931:-**

நியூயோர்க்கில் 1930ம் ஆண்டு மார்ச் 17ம் திகதி கட்ட ஆரம்பிக்கப்பட்ட எம்பயர் ஸ்டேட் கட்டடம், கட்டடவேலைகள் பூர்த்தியாகி திறந்து வைக்கப்பட்டது. இது 102 மாடிகள் கொண்டதுடன் 375 மீற்றர்கள் (1250 அடி) உயரமுடைய துமாகும்.

**மே 01-1961:-**

கியூபாவில் ஆளும் கட்சியைத் தவிர மற்றக்கட்சிகள் அனைத்தும் தடைசெய்யப்பட்டு ஒருகட்சி ஆட்சி கொண்டுவரப்பட்டது. பிடல் காஸ்ட்ரோ 3.30மணிநேரம் நிகழ்த்திய மேதின உரையில் இதனை அறிவித்ததுடன் இனிமேல் தேர்தலே நடைபெறாது என்றும் அறிவித்தார்.

**மே 01-1970:-**

பெரு நாட்டில் பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டது. பல நகரங்கள் அழிந்தன. ஏறக்குறைய 50,000 பேர்கள் பலியாகினர்.

**மே 02-1803:-**

அமெரிக்கா பிரான்சின் ஆதிக்கத்தி லிருந்த லூசியானா என்ற நாட்டினை 150லட்சம் டொலருக்கு பிரான்சிடமிருந்து விலைகொடுத்து வாங்கியது. இதற்கான கிரயப்பத்திரம் இன்று ஜேம்ஸ் மன்றோ - ரொபர்ட் விலிங்ஸ்ட்டன் ஆகியோருக் கிடையே கையெழுத் தாகியது.

**மே 02-1994:-**

தென்னாபிரிக்காவில் நடந்த பொதுத் தேர்தலில் நெல்சன் மண்டேலாவின் தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் பெரும் வெற்றிபெற்றது.

**மே 03-1963:-**

சென்னை மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர்சூட்டப்பட்டது.

**மே 04-1904:-**

பனாமா கால்வாய் கட்டுவதற்கான உரிமையையும் உடமைகளையும் பிரெஞ்சுகானால் கம்பனியிடமிருந்து நான்குகோடி டொலர்களைக் கொடுத்து அமெரிக்கா வாங்கியது. அத்தோடு இன்றே கட்டுமானப் பணிகளையும் தொடங்கியது.

**மே 04-1971:-**

கனடாவில் கியூபெக்கிற்கு வடக்கே சுமார் 220km தூரத்தில் செயின் ஜீன் வியன்னி என்ற ஒரு சிறுநகரம் இருந்தது. இதன் தரைப்பரப்பு நீரில் கரையும் களிமண்ணையும், மணலையும் கொண்டதாகும். இன்று இங்கு பெய்த மழையில் மண்ணரிப்பு ஏற்பட்டு, 100அடி ஆழத்துக்கு பெரும் நிலச்சரிவும் ஏற்பட்டு இந்த நகரமே முழுமையாகப் புதைந்து போயிற்று.

**மே 05-1821:-**

உலகின் மிகச்சிறந்த தளபதிகளுள் ஒருவரும், செயின்ட் ஹெலினா தீவில் சிறைவைக்கப்பட்டிருந்தவருமான நெப்போலியன் தனது 53வது வயதில் இன்று காலமானார்.

**மே 05-1925:-**

டென்னசியில் டேட்டன் என்ற இடத்தில் இருந்த ஒரு பாடசாலையில் டார்வினின் பரிணாமக் கோட்பாட்டை ஜான்-டி.ஸ்கேம் என்னும் ஆசிரியர் கற்பித்துக் கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டார். மதத்தை மதிக்காத குற்றத்துக்காக இந்த ஆசிரியருக்கு 100 டாலர்கள் அபராதம் விதிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மே 05-1956:-

516 பக்கங்களுடன் நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை இன்று வெளிவந்தது. உலகிலேயே அதிக பக்கங்களுடன் வெளிவந்த பத்திரிகை என்ற பெருமையைப் பெற்றது.

மே 05-1994:-

இஸ்ரேல் பிரதமமந்திரி யுட்சாக் ராபின் அவர்களும், பாலஸ்தீனத் தலைவர் யாசீர் அரபாத் அவர்களும் கெய்ரோ நாட்டில் வைத்து, இஸ்ரேலினால் கைப்பற்றப்பட்ட பாலஸ்தீனப் பகுதிகளைத் திருப்பிக் கொடுப்பது பற்றிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

மே 06-1733:-

முதன் முதலாக அகில உலக குத்துச்சண்டைப் போட்டி லண்டனில் நடைபெற்றது. இதில் பிரிட்டனைச் சேர்ந்த பாப்விட்டேக்கர் என்ற வீரரும், இத்தாலி நாட்டைச் சேர்ந்த டிட்டோ ஆல்பெர்ட்டோ டிகார்ணி என்ற வீரரும் மோதினர். இப்போட்டியில் அகில உலக குத்துச்சண்டை வீரர் என்ற பட்டத்தை முதன்முதலாக பிரிட்டன் வீரர் பெற்றுக்கொண்டனர்.

மே 06-1840:-

முதன் முதலாக பசை தடவப்பட்ட தபால்தலைகள் அதிகாரபூர்வமாக விற்பனை செய்யவும் பயன்படுத்தவும் ஆரம்பிக்கப்பட்டது.

மே 06-1851:-

இன்றுகூட பிரசித்தி பெற்று விளங்கும் யேல்ரக பூட்டிற்கு நியூ யோர்க்கில் நியூபோர்ட் என்ற இடத்தைச் சேர்ந்த லினஸ்யேல் என்பவர் காப்புரிமையைப் பெற்றுக் கொண்டனர்.

மே 06-1870:-

அறுவைச் சிகிச்சைகளின்போது முதன்முதலாக குளோரபோமை வெற்றிகரமாகப் பயன்படுத்தியவரான சேர். ஜேம்ஸ்யங் சிம்ஸன் என்ற வைத்தியர் லண்டனில் காலமானார்.

மே 06-1954:-

ஒரு மைல் தூரத்தை 3நிமிடம் 59.4 வினாடிகளில் ஓடிமுடித்து முதன்முதலாக உலக சாதனை ஒன்றைப் படைத்தார் பிரிட்டிஸ் ஓட்டப்பந்தய வீரரான ரோகர் பானிஸ்ட்டர்.

மே 06-1991:-

லண்டனில் செயின்ட் மார்ட்டின் திரையரங்கில் அகதா கிரிஸ்டியின் ''த மெஸஸ் டிராப்'' என்னும் நாடகத்தின் 16000வது நாள் காட்சி நடைபெற்றது. உலகில் வேறெந்த நாடகமும் இத்தனை நாள் காட்சியைக் கண்டதில்லை.

மே 06-1994:-

ஐரோப்பிய ஒன்றியத்தில், ஆஸ்திரியா, பின்லாந்து, நோர்வே, சுவீடன் ஆகிய நாடுகளையும் சேர்த்துக்கொள்ள ஐரோப்பிய பாராளுமன்றம் அனுமதியளித்தது.

மே 07-1882:-

இன்று நடைபெற்ற சூரிய கிரகணத்தின் போது பிரகாசமான ஒரு வால்நட்சத்திரம் கண்டுபிடிக்கப்பட்டது.

மே 07-1889:-

மனித இரத்தத்தில் வட்டப் புழுக்களின் சினை முட்டைகள் இருப்பதைக் கண்டுபிடித்த பிரிட்டனைச் சேர்ந்த உடற்கூற்றியல் நிபுணர் டிமோரி ரிச்சர்ட் லூயிஸ் மரணமடைந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மே 07-1925:-

தாவர எண்ணையைப் பயன்படுத்தி சன்லைட்சோப் தயாரித்தவரும், லீவர் பிரதர்ஸ் கம்பனியை நிறுவியவருமான பிரிட்டிஸ் தொழிலதிபர் வில்லியம் ஹெஸ்கெத் லீவர் காலமானார்.

மே 07-1958:-

அமெரிக்க விமானப்படையைச் சேர்ந்த மேஜர் ஹெச் ஜான்சன் 91248அடி உயரம்வரை பறந்து உலகசாதனை படைத்தார்.

மே 08-1849:-

முதன்முதலாக உலகப் படகோட்டப் போட்டி பெர்முடாவில் நடைபெற்றது. இப்போட்டியில் பெத்முடன் அமெரிக்காவை வென்றது.

மே 08-1902:-

பிரான்ஸ் கரிபியன் தீவான மார்ட்டினிக்கிலுள்ள பீலி என்னும் எரிமலை சீறத்தொடங்கியது. இது வெளிவிட்ட எரிமலைக் குழம்பினாலும், சாம்பலினாலும், மூன்று நிமிடங்களுக்குள் செயின்ட் பியாரி நகரமே அழிந்தது. 30000க்கும் மேற்பட்டவர்கள் இறந்துபோயினர். இந்த நூற்றாண்டின் மிகக்கொடிய எரிமலைச் சீற்றம் இதுவேயாகும்.

மே 08-1945:-

''ஐரோப்பாவின் வெற்றித் திருநாள்.'' ஜேர்மனியின் தலைமைத் தளபதி ஜோட்ல், ரெயிம் என்னும் இடத்தில் ஐஸன்ஹோவரின் இராணுவத் தலைமை அலுவலகத்திற்குச் சென்று நிபந்தனையற்ற சரணாகதி ஒப்பந்தத்தில் நேற்று கையெழுத்திட்டதனைத் தொடர்ந்து ஐரோப்பா போரின் பிடியிலிருந்து விடுதலைபெற்று வெற்றிநாளைக் கொண்டாடியது.

மே 08-1947:-

நிலாவின் தென்துருவப் பகுதியை ஆய்வுசெய்யும் நோக்கோடு முதன் முதலாக ஆய்வுக்கோளான லூனா-ஆர்பிட்டர்-4 என்ற ஆய்வுக்கோள் ஏவப்பட்டது.

மே 08-1971:-

செவ்வாய்க் கோளை ஆய்வு செய்வதற்காக மரீனா-08 என்னும் விண்ணூர்தி ஏவப்பட்டது.

மே 09-1776:-

ஜெனீவாவைச் சேர்ந்த ஜே.எம். பொஸ்ஸேயிட் என்பவர் வடிவமைத்த நிறுத்து கடிகாரம் (Stop watch) ஆய்வுக்காக ஒப்படைக்கப்பட்டது.

மே 09-1962:-

''மாஸா சூஸட் இன்ஸ்டிடுயூட் ஒப் டெக்னோலஜி'' என்ற நிறுவன வளாகத்தில் இருந்த தொலை நோக்கியுடன் இணைக்கப் பட்டிருந்த லேசர் கருவி மூலம் ஒளிக்கீற்றுக்கள் நிலவின் 06km குறுக்களவுடைய பரப்பில் செலுத்தப்பட்டு அங்கிருந்து எதிரொளிக்கப்பட்டது.

மே 09-1988:-

இந்த வருடம் மார்ச் மாதம் 3ம் திகதி கண்டுபிடிக்கப்பட்ட பல்சார் என்னும் துடிவிண்மீனை ஒரு துணை விண்மீன் சுற்றிவருவது கண்டுபிடிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டது.

மே 10-1901:-

இந்திய விஞ்ஞானியான சேர். ஜகதீஸ் சந்திரபோஸ் லண்டன் ரோயல் சொஸைட்டி மண்டபத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள் முன்னிலையில், தாவரங்களுக்கும், உலோகங்களுக்கும் உணர்ச்சிகள் உள்ளன என்பதைப் பல ஆய்வுகள்மூலம் நிரூபித்துக் காட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மே 10-1976:-

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கடல் எல்லை ஒப்பந்தம் அமுலுக்கு வந்தது.

மே 10-1994:-

தென்னாபிரிக்க அதிபராக நெல்சன் மண்டேலா பதவியேற்றார்.

மே 11-1796:-

முதன் முதலாக உளநோயாளர் வைத்திய விடுதி ஒன்று இங்கிலாந்தில் யார்க் என்னுமிடத்தில் திறந்து வைக்கப்பட்டது.

மே 11-1949:-

இது காலவரை ''சயாம்'' என அழைக்கப்பட்டுவந்த நாடு, தனது பெயரை ''தாய்லாந்து'' என மாற்றிக் கொண்டது.

மே 11-1988:-

இல்லினாய்சில் மாண்ட்கோமரி என்னும் இடத்தில் ஒன்பது வயதே நிரம்பிய பிரிட்ஜெட் எல்லிஸ் என்ற சிறுமி தனியாக விமானம் ஓட்டி சாதனை படைத்தாள்.

மே 12-1988:-

உள வரலாற்றியலின் தந்தை என்று போற்றப்படுபவரும் உளப்பகுப்பாய்வியல் மேதையுமான எரிக் எரிக்சன் ரோஸ்ஷட் தனது 91வது வயதில் மரணமானார்.

மே 13-1904:-

சர்வதேச சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு மகாநாடொன்று முதன் முதலாக அமெரிக்க ஜனாதிபதியால் நடாத்தப்பட்டது.

மே 13-1913:-

ரஷ்ய நாட்டுப் பொறியியலாளரான இகார் சிகோர்ஸ்க்கி என்பவர் மெட்ரோகிராட் என்ற இடத்தில் நான்கு இயந்திரங்களைக் கொண்ட விமானம் ஒன்றை உருவாக்கி ஓட்டிக் காண்பித்தார்.

மே 13-1982:-

சோயுஸ் T.S என்னும் விண்ணூர்தி செலுத்தப்பட்டது. இந்த விண்ணூர்தியில் சென்ற அனாம் போலி பெரிஸோவாய், அலக்ஷாண்டர் செரிப் ரோவ் என்ற இரு விண்வெளி வீரர்களும் 211 நாட்கள் 9மணிநேரம் விண்ணில் தங்கியிருந்து சாதனை புரிந்தனர்.

மே 14-1643:-

ஐரோப்பிய வரலாற்றிலேயே நீண்டகாலம் ஆட்சிபுரிந்த பிரான்ஸின் மன்னர், பட்டம் தரித்த நாள். அப்பொழுது அவருக்கு வயது நான்கு.

மே 14-1796:-

''எனக்கு ஏற்கனவே மாட்டம்மை வந்ததனால், இனி பெரியம்மை வராது'' என்று ஒரு இடைச்சி சர்வசாதாரணமாகக் கூறியதைக்கேட்டு வியப்புற்ற எட்வேர்ட் ஜென்னர் அதுபற்றிப் பல ஆண்டுகள் ஆய்வுசெய்தார். இறுதியில் மாட்டம்மை கண்டிருந்த ஒரு இடைச்சியின் கைக்கொப்பளத்தில் இருந்து சீரம் எடுத்து அதனைக் கொண்டு அம்மைப்பால் தயாரித்தது இன்றுதான்

(வாக்கா என்ற லத்தீன் சொல்லுக்கு பசு என்று பொருள். இதிலிருந்து தோன்றியதுதான் வாக்சினேகன் என்னும் சொல்)

மே 14-1948

பாலஸ்தீனப் பகுதியில் இருந்து பிரிட்டன் வெளியேறியது. டெல் அவிவ்வில் ''இஸ்ரேல்'' என்னும் புதியநாடு பிறந்ததாக அறிவிக்கப்பட்டது. அமெரிக்கா இஸ்ரேலை அங்கீகரித்தது.

தொகுப்பு:-
சந்துரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு


1. இலங்கையின் மிக உயர்ந்த மேட்டுநிலம்?
   ஹட்டன் மேட்டுநிலம்
2. இலங்கையின் முதல் பெண்கள் பாடசாலை?
   உடுவில் மகளிர் கல்லூரி
3. இலங்கையில் எந்த மன்னன் காலத்தில் பௌத்த மதம் கொண்டுவரப்பட்டது?
   தேவாநம்பியதிஸ்ஸன்
4. இலங்கையின் இலவச பாடநூல் விநியோகம் ஆரம்பபிக்கப்பட்டது?
   1980ஆம் ஆண்டிலிருந்து
5. இந்து சமுத்திரத்தின் முத்து என அழைக்கப்படுவது?
   இலங்கை
6. இலங்கை அமைந்துள்ள சமுத்திரம்?
   இந்து சமுத்திரம்
7. இலங்கையில் இலவச சீருடை விநியோகம் ஆரம்பபிக்கப்பட்டது?
   1993ஆம் ஆண்டிலிருந்து
8. 10வது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா?
   தசரவிழா
9. கங்காருவின் தேசம் என அழைக்கப்படுவது?
   அவுஸ்திரேலியா
10. உலகில் மிகப்பெரிய பாலைவனம்?
    சகாரா பாலைவனம்
11. மிகச்சிறிய கண்டம்?
    அவுஸ்திரேலியா
12. உலகின் மிகப்பெரிய கடல்?
    கஸ்பியன் கடல்
13. இருண்ட கண்டம் என அழைக்கப்படுவது?
    ஆபிரிக்காக் கண்டம்
14. உலகில் சனத்தொகை அதிகமுள்ள நாடு?
    சீனா
15. மனிதன் முதலில் சந்திரனில் கால்பதித்த ஆண்டு?
    1969 (ஜுலை)
16. சீனாவின் துயரம் என அழைக்கப்படுவது?
    குவாங்கோ நதி
17. உலகின் மிக உயர்ந்த மலைச்சிகரம்?
    எவரெஸ்ட் சிகரம்
18. இலங்கையின் மிக உயர்ந்த மலை?
    பீதுருதாலகால (2524m)

சி.ஞானப்பிரியா
தரம் 7B




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# எங்கள் தூரிகைகளிலிருந்து...



பா.நிலோஜன்
13




அ. ஜீவராஜ்
தரம் 7A



தி. புஸ்பகாந்
10A



அ. ஜீவராஜ்
தரம் 7A



தி. புஸ்பகாந்
தரம் 10A




பா. பிரியதர்சினி
தரம் 7A




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சி. தர்சினி
தரம் 7A



சி. பவிதா
தரம் 8A



மௌ.தர்சிகா
தரம் 7A




பா.யதுர்சிகா
தரம் 10B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெ.சிபோறா
தரம் 9B



ச.லதுசன்
தரம் 7A



ர.நிதர்சன்
தரம் 7A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவுப்போட்டி

அன்பான மாணவர்களே! அகமலர்கள் உங்கள் வாசிப்பு மற்றும் கிரகித்தல் திறனை மேம்படுத்தும் நோக்கில் அறிமுகப்படுத்தும் போட்டியே இந்தப் பொது அறிவுப்போட்டி ஆகும்.

இங்கே கேட்கப்படும் வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை இந்த அகமலர்கள் சஞ்சிகையிலேயே ஏதாவது ஒரு பக்கத்தில் உங்களால் கண்டறியக் கூடியதாக இருக்கும் முயற்சி செய்யுங்கள். முயற்சி திருவினையாக்கும்.

உங்கள் விடைகள் யாவும் யூலை மாதம் 10ம் திகதிக்கு முன்பாக அகமலர்களைவந்து சேரக்கூடியவாறு அனுப்பி வையுங்கள். சரியான விடையனுப்பி வைக்கும் மூன்று அதிர்ஷ்ட சாலிகளுக்கு பணப்பரிசுகள் வழங்கப்படும்.

## பரிசில் விபரம்;

**1ம் பரிசு;**

**செல்வி கோ. ருசந்தா**

**யா/நாவற்குழி மகா வித்தியாலயம்**

**2ம் பரிசு;**

**செல்வி அ. மரியமலர்**

**யா/நாவற்குழி மகா வித்தியாலயம்**

**3ம் பரிசு;**

**செல்வன் தி. புஷ்பகாந்த்**

**யா/நாவற்குழி மகா வித்தியாலயம்**

## பொது அறிவுப்போட்டி இல. 03

வினாக்கள்

1) சென்னை மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று எப்பொழுது பெயர் சூட்டப்பட்டது?

2) பனாமா கால்வாயைக் கட்டிய நாடு எது?

3) அகில உலகக்குத்துச்சண்டை போட்டி எப்பொழுது எங்கே நடைபெற்றது?

4) தபால் தலைகள் எந்த ஆண்டு முதல் பாவனைக்கு வந்தது?

5) இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கடல் ஒப்பந்தம் எப்பொழுது முதல் அமுலுக்கு வந்தது?

6) இஸ்ரேல் நாடு எப்பொழுது உருவாகியது?

8) சர்வதேச சுற்றுச்சூழல் மகாநாடு முதன் முதலாக எப்பொழுது யாரால் கூட்டப் பட்டது?

9) தாவரங்களுக்கு உணர்ச்சிகள் உள்ளன என்பதை முதன் முதல் நிருபித்தவர் யார்?

10) இலங்கையின் முதல் பெண்கள் பாடசாலை எது?

## பொது அறிவுப் போட்டி இல. 02
### விடைகள்

1) ரொடீசியா

2) ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை

3) ஏழையின் கண்ணீர் இரும்பையும் பொசுக்கும்

4) வலயக்கல்விப்பணிப்பாளர் திருவாளர் கு. பிறேமகாந்தன்

5) 25.04.2008 - 02.05.2008 வரை நடாத்தப்பட்டது.

6) 28.04.2008 அன்று காலை 9.23 மணிக்கு விண்ணில் செலுத்தப்பட்டது.

7) "சமாதானத்துக்கான சம்பியன்" பட்டம்

8) 1942 ஏப்ரல் 05

9) ஏப்ரல்

10) 1973 ஏப்ரல் 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநோத புதிர்ப் போட்டி:

**அன்பான மாணவர்களே,**

உங்களது விவேகத்திறனுக்கு சவால் விடும் பக்கமாக அகமலர்கள் தாங்கி வரும் பக்கம் இதுவாகும்.

தொடர்ந்து வரும் அகமலர்கள் இப்பக்கத்தில் உங்களது விவேகத் திறனை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறுபட்ட புதிர்ப் போட்டிகளைத் தாங்கியதாகவே வெளிவரும்.

இப்போட்டிகளில் கலந்து கொண்டு சரியான விடைகளை அனுப்பும் மாணவர்களில் பரிசுக்குரியவர்கள் குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்படுவர்கள் தேர்வு செய்யப்படும் வெற்றியாளர்கட்கு

முதலாவது பரிசாக மறவன்புலோவைச் சேர்ந்த அமரர் வே. தில்லைநாதன் அவர்களது ஞாபகார்த்தமாக வழங்கப்படும் 300/= பணத்தொகையும்

இரண்டாம் பரிசாக நாவற்குழியூரைச் சேர்ந்த அமரர். சி. இராமலிங்கம் அவர்களது ஞாபகார்த்தமாக வழங்கப்படும் 250/= பணத்தொகையும்


மூன்றாம் பரிசாக நாவற்குழியைச் சேர்ந்த அமரர். நா. கோபலசிங்கம் அவர்களது ஞாபகார்த்தமாக வழங்கப்படும் 200/= பணத்தொகையும் பரிசாக வழங்கப்படும்.


பரிசு பெறும் மாணவர்களது விபரம் அடுத்து வரும் அகமலர்களில் பிரசுரமாகும். மாணவர்களே உங்கள் விடைகள் யாவும் கீழ்வரும் முகவரிக்கு யூலை 10ம் திகதிக்கு முன்பாக வந்து சேர வேண்டியது முக்கியமானதாகும்.

**விநோத புதிர்ப் போட்டி,**
**அகமலர்கள்,**
**உளநலத் திறன் விருத்திக் கழகம்,**
**யா / நாவற்குழி மகா வித்தியாலயம்.**
**நாவற்குழி, கைதடி.**

**அகமலர்கள் நடாத்திய விநோதப் புதிர்ப்போட்டி இல. 02ல் வெற்றிபெற்ற பரிசுக்குரியவர்களது பெயர் விபரம்:-**

| முதலாம் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|
| செல்வி த. மதனிகா | செல்வன் T. தனுராஜன் | செல்வி ந. ஜன்சிகா |
| யா/ நாவற்குழி ம.வி. | நாவற்குழி தெற்கு, கைதடி. | யா/ நாவற்குழி ம.வி. |







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநோதப்புதிர்ப் போட்டி 02 - விடைகள்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கி | ள் | ளை | | 11 | பா | மா | லை | |
| 2 | க | ரு | ணை | | 12 | க | வ | லை | |
| 3 | ந | ந் | தி | | 13 | க | வி | தை | |
| 4 | ம | ண் | டை | | 14 | பா | ர | த | ம் |
| 5 | க | னி | வு | | 15 | ம | து | ர | ம் |
| 6 | ப | ஞ் | சு | | 16 | ம | கு | ட | ம் |
| 7 | ப | ல | கை | | 17 | ஆ | ப | த் | து |
| 8 | வி | ட | லை | | 18 | தே | நீ | ர் | |
| 9 | த | வி | ல் | | 19 | அ | ட் | டை | |
| 10 | பா | தி | ரி | | 20 | ஓ | ரு | ர் | |

### உளநலத்திறன் விருத்திக்கழகம்,
### யா / நாவற்குழி மகா வித்தியாலயம்,
### செயற்குழு விபரம் - 2008.

**காப்பாளர்:**

திருமதி வ. மேகலிங்கம்

அதிபர், யா/ நாவற்குழி ம.வி.

**தலைவர்:**

செல்வன். வீரசிங்கம் றேகன் (தரம் 12)

**உபதலைவர்:**

செல்வன். சத்தியராஜ் மோசிகன்(தரம் 7)

**செயலாளர்:**

செல்வி. சுப்பிரமணியம் கயானி(தரம் 10)

**பொருளாளர்:**

செல்வன். பதி. லகிந்தன் (தரம் 10)

**இதழாசிரியர்கள்:**

செல்வன். திருச்செல்வம் புஷ்பகாந்த்

செல்வி. ஸ்ரீபன் பிரியதர்ஷினி

**பொறுப்பாசிரியர்:**

திரு. வே. க. சந்திரகுமார்

**வகுப்புப் பிரதிநிதிகள்:**

தரம் 6: செல்வி நரேந்திரராஜா பவதாரிணி

தரம் 7: செல்வி வேலாயுதம் பிரகா

தரம் 8: செல்வி அழகராசா அபிநயா

தரம் 9: செல்வி குகதேவன் நிதூசனா


தரம் 10:செல்வன் பரராஜசிங்கம் தமிழரசன்

தரம் 12:செல்வி அருமைராசா அகலிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநோதப்புதிர் போட்டி இல 03




மாணவர்களே! கீழே தரப்படும் குறிப்புக்களைக் கொண்டு வட்டங்களுக்குள் இருக்கும் வெற்றிடங்களை நிரப்புங்கள். உங்கள் உதவிக்காக ஒவ்வொரு சொல்லில் இருந்து ஒரு எழுத்து வட்டங்களுக்குள் கொடுக்கப் பட்டுள்ளது. பொருள் தரும் சொற்களாக அமையக்கூடியவாறு பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்பப்பட்ட வட்டத்தை (நீங்களாகவே தயாரித்து எடுத்த வட்டத்தை) 10.07.2008க்கு முன்பாக எமக்கு அனுப்பி வையுங்கள். விடைகள் வந்து சேரவேண்டிய முகவரி

விநோத புதிர்ப் போட்டி,
அகமலர்கள்,
உளநலத் திறன் விருத்திக் கழகம்,
யா / நாவற்குழி மகா வித்தியாலயம்.
நாவற்குழி, கைதடி.

உதவிக்காகத் தரப்படும் குறிப்புக்கள்

1) மென்மை - ஒத்த சொல்
2) தொன்மைமிக்க உலக மொழிகளில் ஒன்று
3) அடிமேல் அடி அடித்து இதுவும் நகருமாம்
4) இரசம் வைப்பதற்கு தேவைப்படும் ஒன்று
5) பூமிக்கு மறுபெயர்
6) கஞ்சனை இப்படியும் சொல்வர்
7) இராமாயணத்தில் வரும் நாடு
8) கொப்பூழ் - இதன் ஒத்த சொல்
9) சிறு பெண்ணை இப்படி அழைப்பர்
10) மகளிரின் கால்விரல்களில் அணிவது
11) குங்குமம் வைத்துக்கொள்ள பயன் படுவது
12) நோய் பரப்புவது இணைந்திருந்தே வஞ்சிப்பவர்களை இப்படியும் குறிப்பிடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களது இலத்திரனியல் பொருட்களில் ஏற்படும்
சகல விதமான பழுதுகளையும்

- உரிய வேளையில்
- உத்தரவாதத்துடன்
- நியாயமான கட்டணத்தில்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

திருத்திக்கொள்ள தென்மராட்சிப் பகுதியில் சேவை நோக்கோடு இயங்கும் ஒரே ஒரு நிறுவனமான எங்களை நாடுங்கள்,

## தொழிற்பயிற்சி நிலையம்,
## வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும் பிரிவு,
## யா / நாவற்குழி மகா வித்தியாலயம்,
## நாவற்குழி, கைதடி.

குறிப்பு :

பாடசாலைகளின் இலத்திரனியல் பொருட்கள் மிகக் குறைந்த சேவைக்கட்டணத்தோடு பழுது பார்த்து தரப்படும்.

## "உங்கள் திருப்தியே எங்கள் விருத்தி"

அன்பளிப்பு : ரூபா 25/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
[illegible] கிளை நூலகம்

# இலங்கை வங்கி தேசத்தின் வங்கியாளர்

இலங்கை வங்கியில் சிறுவர் சேமிப்புக் கணக்கு

உங்கள் பிள்ளையின் உயர்கல்விக்கான நிதி அடித்தளம்.

**சிறுவர் சேமிப்புக் கணக்கின் மூலம் உங்கள் பிள்ளையின் உயர் கல்விக்கான நிதி அத்திவாரத்தைக் கட்டியெழுப்புங்கள்.**

**சிறுவர் சேமிப்புக் கணக்கு, பாதுகாவலருக்கான இலவச ஆயுட்காப்புறுதி, பிள்ளைகளுக்கான விபத்து மற்றும் சுகயீனக் காப்பீடு, ஐந்தாம் ஆண்டு மற்றும் பல்கலைக்கழகப் புகுமுக பரீட்சைகளுக்கான புலமைப் பரிசில்கள் போன்ற பல தனித்துவமான நன்மைகளையும் கொண்டுள்ளது.**

மேலதிக விபரங்களுக்கு உங்கள் அருகில் உள்ள இலங்கை வங்கிக் கிளையினை நாடுங்கள்

**இலங்கை வங்கியோடு இணைந்து உங்கள் பிள்ளைகளின் உயர்கல்விக்கான நிதிக்காக அடித்தளமிடுங்கள்.**

பிள்ளையார் நேரசப் பதிப்பகம், நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org